| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>பவியோலா ஞானம் | EA.No.36/05 in EP.No.84/04 | 04.01.2024 |

4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை (2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது)

1. இந்த மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறைவேற்று மனுவில் நான் கோருரிமை கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.9 ஆவணம் மைக்கேல் என்பவர் என் மீது தாக்கல் செய்த வழக்கின் வாதி என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.9 ஆவணத்தில் அ பட்டியல் சொத்தாக சர்வே எண்.314/22 கே மற்றும் 314/22 எல் கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை பொருத்த புல வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் முன்னதாகவே தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.314/22 ஐ என்பது சந்தா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண்.314/22 ஐ என்பது என்னவாக உள்ளது என்றால் மைக்கேலுக்கு உரியது, என்னுடைய சொத்து சர்வே எண்.314/22H. மேற்படி சர்வே எண்.314/22H ஐ பொருத்த பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது தகப்பனார் பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சர்வே எண்.314/22H ஐ பொருத்து பத்திரம் உள்ளதா என்றால் பத்திரம் உள்ளது. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் எனக்கு யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் எனது தயார் எனக்கு எழுதி கொடுத்தார். மேற்படி சர்வே எண்.314/22H எனக்கு பாத்தியம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் இல்லை என்றால் செட்டில்மெண்ட் பத்திரம் உள்ளது, சிட்டா, அடங்கலும் உள்ளது. எனது தாய், தந்தை பெயரில் பத்திரம் உள்ளதா என்றால் இல்லை.

2. எனது பெயரில் பட்டா ஏற்பட்டதற்கு உத்தரவு எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த மனுவை நான் தாக்கல் செய்துள்ளது தவறு என்றாலும் மனு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. 1999 லேயே மனு சொத்தை பொருத்து தீர்ப்பாணை ஏற்பட்டுவிட்டது என்றாலும் தீர்ப்பு பெற்றவருக்கு சொத்து கிடைக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.